5. அறிவிப்பு.

நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நான் நேற்று பேரவையில் அறிவித்ததற்கு இணங்க மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பேச்சில் தேர்வாணைக் குழு பற்றிய குறிப்புகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியுள்ளேன். மேலும், இது தொடர்பான சில பகுதிகளும் நீக்கப்பட்டுள்ளன. நீக்கப்பட்டது போக மீதியுள்ள நடவடிக்கைக் குறிப்புகள் பேரவை நூலகத்தில் வைக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

6. கவன ஈர்ப்பு.

தோளூர்பட்டி கிராமத்தில் (தொட்டியம் தொகுதி) தொழுநோய் மருத்துவமனை மூடல்.

* திரு. ரா. பெரியசாமி: தலைவரவர்களே, திருச்சி மாவட்டம் தொட்டியம் தொகுதியிலுள்ள தோளூர்பட்டி கிராமத்திலுள்ள தொழுநோய் மருத்துவமனை மூடப்பட்டு தற்போது பாழடைந்த நிலையிலுள்ளது பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்—

அறிக்கை.

1971 ஆம் வருடம், திருச்சி மாவட்டம், தோளூர்பட்டியில் ஒரு தொழுநோய் கட்டுப்பாடு நிலையத்தை அமைப்பதற்கு அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இக்கட்டுப்பாடு நிலையம் முன்னால் 100 படுக்கைகளைக் கொண்ட ஒரு தொழுநோய் மருத்துவ மனையாக இருந்த ஒரு பழைய கட்டிடத்தில் அமைக்கப்பட்டது. மேற்கூறிய தொழுநோய் மருத்துவமனை (Lep o-sorium) முன்னால் தனியார் நிறுவனத்தினரால் (Missiona y) நடத்தப்பட்டு, அரசுக்கு ஒப்படைக்கப்பட்டது. மேற்கூறிய கட்டிடம் தனியார் நிறுவனத்தினரால் இனாமாகவோ அல்லது பணம் பெற்றுக் கொண்டோ அரசுக்கு ஒப்படைக்கப்பட்டதற்கு தகுந்த ஆதாரங்கள் தற்பொழுது கிடைக்கவில்லை. இக்கட்டிடத்தினை அரசு ஏற்றுக் கொண்டபோதே அது நல்ல நிலையில் இல்லை. இருந்தும், வேறு வசதியான இடம் கிடைக்காததாலும், ஓரளவுக்குத் தேவையான குறைந்த பட்ச வசதி இக்கட்டிடத்தில் இருந்ததாலும், அன்றைக்கு இருந்த நிலையில் தொழுநோய்க் கட்டுப்பாடு நிலையம் அங்கே நிறுவப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1981 பிப்ரவரி 28] [டாக்டர் எச். வி. ஹண்டே]

பின்பு கீழே கூறியுள்ள காரணங்களால் தோளூர்பட்டி தொழுநோய் கட்டுப்பாடு நிலையம் முசிறிக்கு மாற்றப்பட்டது.

(1) தோளூர்ப்பட்டியில் உள்ள தொழு நோய்க் கட்டுப்பாடு நிலையம் தோளூர்ப்பட்டி கிராமத்திலிருந்தும், பிரதான சாலையில் இருந்தும் சுமார் 2 கிலோ மீட்டர் தொலை தூரத்தில் போக்குவரத்து வசதியில்லாத இடத்தில் அமைக்கப்பட்டிருந்தது. தொழு நோய்க்கட்டுப்பாடு நிலையம் இங்கு நிறுவு முன் இந்த மருத்துவமனையைச் சேர்ந்த ஒரு மருத்துவ அலுவலர் (Medical Officer) உள் நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த தொழு நோயாளிகளால் கொலை செய்யப்பட்டுவிட்டார். அதனால் தொழு நோய்க் கட்டுப்பாடு நிலையம் இங்கே நிறுவப்பட்டபின் அரசு அலுவலர்கள் இங்குள்ள குடியிருப்புகளில் தங்குவதற்கு அச்சப்பட்டார்கள்.

(2) தோளூர்ப்பட்டி முன்னேற்றம் அடையாத, போக்குவரத்து வசதி இல்லாத ஒரு கிராமம் ஆகும். தோளூர்ப்பட்டி தொழு நோய்க்கட்டுப்பாடு நிலையம், புதர்களும், செடிகளும் அதிகமாக உள்ள இடத்தில் அமைக்கப்பட்டிருந்ததால், இங்கு பணி புரிந்த அரசு அலுவலர்களுக்கும், தொழு நோயாளிகளுக்கும், பாம்பு மற்றும் தேள் போன்ற விஷப் பிராணிகளால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலை இருந்தது.

(3) தோளூர்ப்பட்டியில் பெட்ரோல் நிலையம் கிடையாது. தோளூர்ப்பட்டியிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள முசிறியில்தான் உள்ளது. பெட்ரோல் நிரப்புவதற்கு 21 கிலோ மீட்டர் தூரம் அநாவசியமாக செல்ல வேண்டியிருந்தது.

(4) தோளூர்ப்பட்டி தொழு நோய்க் கட்டுப்பாடு நிலையம், அதனுடைய உட்கிளைகளுக்கிடையில் ஒரு மையமான இடத்தில் அமைக்கப்படவில்லை. தோளூர்ப்பட்டி தொழுநோய் கட்டுப்பாடு நிலையம் ஒரு தொலை தூரத்தில் உள்ள இடத்தில் அமைக்கப்பட்டிருந்ததால் மருத்துவ அலுவலர்களால் (Medical Officer) தொழுநோய் ஆய்வாளர்களால் (Leprosy Inspector) செய்யப்படும் பணியினை சரியான மேற்பார்வை செய்ய முடியவில்லை.

(5) தொழுநோய் கட்டுப்பாட்டு நிலையத்தைத் தோளூர்ப்பட்டியிலேயே அமைப்பதற்குப் பாதுகாப்பான, சரியான கட்டிடம் கிடைக்கவில்லை. இருந்தாலும், தோளூர்ப்பட்டியில் தொழுநோய்க் கட்டுப்பாடு நிலையம் இருந்த அதே பழைய கட்டிடத்தில், ஒரு தொழு நோய்க் கட்டுப்பாடு கிளை நிலையம் ஒரு தொழுநோய் ஆய்வாளரைக் கொண்டு இயங்கி வருகிறது. அந்தக் கட்டிடத்தில் ஒரே ஒரு அறை மட்டும் உபயோகிப்பதற்கு தகுந்தவாறு உள்ளது. தொழுநோய் ஆய்வாளர், அந்த அறையை தன்னுடைய அலுவலகத்திற்காகவும், ஆவண காப்புகமாகவும் உபயோகப்படுத்திக் கொண்டு வருகிறார்.

* திரு. ரா. பெரியசாமி: தலைவரவர்களே, திருச்சி மாவட்டம், தோளூர்ப்பட்டியில் முன்பு இருந்த அந்த தொழு நோய் மருத்துவமனைக்கு காங்கிரஸ் கட்சியின் ஆட்சிக் காலத்திலே புதியதாகக் கட்டிடம் கட்டப்பட்டது. அதற்கு முன்புதான் அது பழைய கட்டிடத்திலே தனியார் துறையினரால் நடத்தப்பட்டு வந்தது. ஆனால் அதற்குப் பிறகு புதிய கட்டிடம் கட்டப்பட்டது. கிட்டத்தட்ட 15 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்ட அக்கட்டிடம் நல்ல நிலையிலேதான் இருந்தது. இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதுபோல அது பழைய கட்டிடம் அல்ல. ஆகவே அங்கே பாதுகாப்பான வசதி இல்லை என்றும், போக்குவரத்து வசதி இல்லாத இடத்தில் அது அமைக்கப்பட்டிருந்தது என்றும் இந்த அறிக்கையிலே சொல்லப்பட்ட அனைத்தும் உண்மைக்கு மாறானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பெட்ரோல் நிலையம் தோளூர்ப்பட்டியில் இல்லை, அதற்காக 21 கிலோ மீட்டர் தூரம் வரை அங்கிருந்து செல்ல வேண்டியிருக்கின்றது என்பது எல்லாம் உண்மைக்கு மாறானது. தோளூர்ப்பட்டிக்கு அருகாமையிலுள்ள தொட்டியம் பஞ்சாயத்து யூனியனுக்கு எதிர்ப்புறம் பெட்ரோல் பங்க் உள்ளது. அதனுடைய தூரம் 3 அல்லது 4 கிலோ மீட்டர்தான் உள்ளது. மேலும் செங்கற்பட்டிலே இருக்கின்ற தொழு நோய் மருத்துவமனை 2 அல்லது 4 கிலோ மீட்டர் தொலைவில்தான் இருக்கின்றது. தஞ்சாவூர் மாவட்டத்தில் சிங்கிப்பட்டி ஆஸ்பத்திரி அப்படித்தான் இருக்கின்றது. ஆகவே தோளூர்ப்பட்டியிலே இருக்கின்ற தொழுநோய் மருத்துவமனை மிகவும் காற்றோட்ட வசதியுள்ள இடத்தில்தான் இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சரவர்கள் வேண்டுமானால் நேரில் வந்து பார்வையிடலாம். ஆகவே அந்த மருத்துவமனையை மீண்டும் அங்கே ஏற்படுத்துவதற்குரிய வகையில் அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும். மேலும் அரசு அதிகாரிகள் சொல்வது போல் அந்த இடத்திலே டாக்டர் கொல்லப்பட்டு விட்டார் என்று சொன்னாலும் எத்தனையோ இடங்களில் இப்படித்தான் நடக்கின்றன. அதற்காக அந்தந்த இடங்களில் உள்ள மருத்துவமனைகளை மூடிவிடுவது என்பது சரியாக இருக்குமா? அவரவர்கள் வீட்டில் நல்ல முறையில் சாவதும் உண்டு, கெட்ட முறையில் சாவதும் உண்டு அதற்காக வீட்டையே அழித்துவிட முடியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்ன கேட்க வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அதைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ரா. பெரியசாமி: தலைவரவர்களே, அங்குள்ள கட்டிடம் நல்ல நிலையிலே இருக்கின்றது. ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் மறு பரிசீலனை செய்து அந்தத் தொழுநோய் மருத்துவமனை அங்கேயே இருக்க வேண்டும் என்பதற்குரிய அளவிலே ஏற்பாடு செய்ய வேண்டும். முன்பு அந்தப் பகுதியிலே

1981 பிப்ரவரி 28] [திரு. ரா. பெரியசாமி]

தொழுநோய் சற்றுக் குறைவாக இருந்தது. இப்போது மீண்டும் அங்கு அந்த நோய் திரும்பி இருக்கின்றது. ஆகவே அந்த மருத்துவமனையை நல்ல முறையில் செயல்படுத்துவதற்கான ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன சில குற்றச்சாட்டுகள் உண்மைக்குப் புறம்பானது என்று நான் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். அங்கே இருக்கக் கூடிய தொழு நோய் மருத்துவமனை காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்டது என்று சொன்னார்கள். என்னிடத்தில் இருக்கும் புள்ளி விவரப்படி, மருத்துவ மனை காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்டதானாலும், அப்போது அப்பகுதியில் பரவியிருந்த தொழு நோயின் சதவீதம் ஆயிரத்திற்கு 30 ஆக இருந்தது. அது தற்போது ஆயிரத்திற்கு 6 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியையும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே அந்தப்பகுதியிலே பெரு நோய் பெரும் அளவு கட்டுப் படுத்தப்பட்டிருப்பதோடு மட்டுமல்லாமல், அந்த மருத்துவமனை அந்தப் பகுதியிலே இருக்கக் கூடிய நோயாளிகளுக்கு மட்டும் அல்ல, அந்த வட்டாரத்திலே அந்த தாலுக்காவிலே இருக்கக் கூடிய பல்வேறு இடங்களிலிருந்து தொழு நோயாளிகள் வந்து தங்கி இருந்து சிகிச்சைப் பெற்றுச் செல்கிறார்கள். அவர்களுக்காகவும் தான் அது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தோளூர்ப்பட்டியில் இருந்த மருத்துவமனையை முசிரிக்கு மாற்றியதினால், அந்த நோயாளிகளுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. அந்தப் பகுதி மக்களுக்கும் பாதிப்பு இல்லை. மாறாக நோய் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. பாதிப்பு எப்பொழுது ஏற்படும் என்று சொன்னால், Lep osy Detection works என்று சொல்வார்கள். தொழு நோயைக் கண்டு பிடிக்கக் கூடிய அந்தப் பணிக்கு குந்தகம் ஏற்பட்டால்தான் அந்தப் பகுதி பாதிக்கப்படும். இந்த மருத்துவமனையை மாற்றியது நல்லது தான் என்றுதான் அந்தப் பகுதி மக்கள் சொல்லுகிறார்கள். மக்களுடைய எண்ணத்தை அறிந்த பிறகு, அதன் அடிப்படையிலேதான் அவர்களுடைய உணர்வை பிரதிபலிக்கும் வகையில் 1970-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ஆம் நாளன்று ஜி.ஓ. எம்.எஸ். நெ. 1927-ன் கீழ் இந்த மருத்துவமனையை மாற்றுவதற்கான உத்தரவு இடப்பட்டு, மாற்றப்பட்டு, இப்போது அது முசிரியில் நல்ல முறையில் நடந்துக் கொண்டிருக்கிறது. அதற்காக மக்கள் அங்கே வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்று கூட சொல்வேன். ஆகவே, மாண்புமிகு அங்கத்தினர்

அவர்களுக்கு இதில் எந்த விதமான வருத்தமும் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அவருடைய தொகுதியில் இருந்த மருத்துவமனை வேறொரு தொகுதிக்கு மாற்றப்பட்டது குறித்து அவர் சற்று வேகமாக பேசியிருக்கலாம். அவர் அந்தப் பகுதி மக்களை அணுகி பேசினால் அவர்கள் இதை நிச்சயமாக எந்த அளவிற்கு வரவேற்கிறார்கள் என்பதைப் புரிந்துக் கொள்வார்.

ஆகவே அந்தப் பகுதியிலே இந்த மருத்துவ மனை மாற்றத்தினால் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. பாதிப்பு ஏற்பட வேண்டுமென்றால் தொழுநோய் டிடெக்ஷன் என்ற அந்தப் பணிக்குத்தான் பாதிப்பு ஏற்பட வேண்டும். ஆனால் எந்தவித பாதிப்பும் அந்தப் பகுதி மக்களுக்கு ஏற்படவில்லை. மாறாக நன்மை தான் ஏற்பட்டிருக்கிறது என்று எடுத்துக் கூறி—இதைக் கேட்டு மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் மன ஆறுதல் அடைவார் என்றும் நம்புகிறேன். ஆகவே அவர் இதில் வருத்தப்பட எதுவும் இல்லை.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) பகுதிநேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்ட முன்வடிவு தமிழ்நாடு 1981—விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேரக் கிராம அதிகாரிகளை பதவிகளிலிருந்து நீக்கும் சட்ட முன்வடிவினை—அவர்களுக்கு பதிலாக முழு நேர கிராம அதிகாரிகளை போட வேண்டும் என்கிற சட்ட முன் வடிவினை இந்த அவையிலே கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களின் முன்னால் வைத்தபோது, பெரும்பாலான மாண்புமிகு உறுப்பினர்கள் பகுதி நேரக் கிராம அதிகாரிகளை பதவி நீக்கம் செய்வதை ஆதரித்து இருக்கிறார்கள்.

அப்படி ஆதரவு தெரிவித்த பெரும்பாலான உறுப்பினர்களில் எல்லா எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் இருக்கிறார்கள். அவர்கள் இந்தப் பகுதி நேரக் கிராம அதிகாரிகளை பதவி நீக்கம் செய்வதில் ஆதரவு தெரிவித்து, அவர்களுக்கு காம்பன்சேஷன் கொடுப்பதிலே மட்டும் தான் மாறுபட்டு சிலபேர் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்கள், இவ்வதிகாரிகளை நீக்குவதிலே எந்தவித மாறுபட்ட கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை என்பதை நான் முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.